# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2151/2 - 2019 නොවැම්බර් මස 25 වැනි සඳුදා - 2019.11.25

2151/2 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: කොළඹ/ඉඩම්/3/20/එන්එච්.
காணி அமைச்சின் குறிப்பு
இல.: எல்/03/96/என்எச்/382.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், (பிரிவு இல. 25 கொழும்பு மாநகர சபை எல்லையில்) பஞ்சிகாவத்தை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. 9823 மற்றும் 2019.06.20 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 - 2 எனக் காட்டப்பட்ட 0.1166 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டு.

**துண்டு இல. 01 - வரி மதிப்பீட்டு இல. 175/40, 191/20 மற்றும் இன்னும் சாஹிர் காசிம், ஹாஜியார் பிளேஸ்**

காணியின் பெயர்: - ; உரிமை கோருவோர்: அரசு, வீட்டுத்தோட்டம், 02 மாடி கொண்ட நிரந்தரமான கட்டடங்கள் 02 காணப்படுகின்றன. டப்ளியூ, ரீ. ஹேமரத்ன, சித்தி சுலைனா மற்றும் இன்னும் சிலர் பயன்படுத்துகின்றனர்; ஆரம்ப உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0905 ஹெக்டயார்.

**துண்டு இல. 02 - வரி மதிப்பீட்டு இலக்கம் இல்லை**

விபரம்: வீதி; ஆரம்ப உரிமை கோருவோர்: அரசு, உரிமை கோருவோரை கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0261 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. பி. விக்ரமசிங்க,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
டாம் வீதி,
கொழும்பு 12,
2019, ஒற்றோபர் 04.

12 - 297